**OS No.113/2023**

**DW–1 –லதா**

**க/பெ.திலிப் குமார்**

**நாள். 05.02.2026**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1.நான் பட்டம் மேற்படிப்பு படித்து இருக்கிறேன். தற்போதும் அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். பிரமாண வாக்கு மூலத்தில் நான் குறிப்பிட்டிருக்கும் முகவரியில் தான் தற்போது குடியிருந்த வருகிறேன். சுமார் 25 ஆண்டுகளாக அதே முகவரியில் குடியிருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்திருக்கும் வாதியின் வீடு எங்கே இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால் வீடு எங்கே இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

2. வாதியை வழக்கு போட்ட பின்பு தான் தெரியும். காட்டப்படும் பிரமாணவாக்கு மூலத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான். **வாசாஆ–2** ஆவணத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான். **வாசாஆ–2** ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் இருக்கும் புகைப்படம் என்னுடையது தான் அதற்கு அருகில் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான். **வாசாஆ–4** ஆவணத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கிற்கு முன்பு வாதி அனுப்பிய அறிவிப்பை நான் வாங்கவும் இல்லை படிக்கவும் இல்லை. என் பள்ளியில் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பானது என் கைவசம் ஒப்படைக்கப்படவில்லை. முன்னெச்சரிக்கை மனு நான் தாக்கல் செய்த போது அதில் அறிவிப்பை பற்றி குறிப்பிட்ட சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான் ஆனால் அதனை என் வழக்கறிஞர் அறிவுறுத்தியதன் பெயரில் தான் தாக்கல் செய்தோம்.

3. அதில் அறிவிப்பை பற்றி குறிப்பிட்ட சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான் ஆனால் அதனை என் வழக்கறிஞர் அறிவுறுத்தியதன் பெயரில் தான் தாக்கல் செய்தோம்.நான் அறிவிப்பு எதுவும் வாங்காத நிலையில் என்னுடைய முன்னெச்சரிக்கை மனுவில் மட்டும் வாதியின் பெயரை குறிப்பிட்டு சொன்னதற்கு என்னால் காரணம் சொல்ல முடியாது. எனக்கு அறிவிப்பு விருப்பப்பட்டு இருந்த சமயத்தில் அதில் வாதியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது அதன் மூலம் எனக்குத் தெரியும். அப்படி வாதியின் பெயர் குறிப்பிட்ட அறிவிப்பு திருப்பப்பப்படாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பணம் தேவை எதுவும் இருக்கவில்லை என்பதை நிரூபிக்க நான் ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை ஆனால் எனக்கு பணம் தேவை இருக்கவில்லை நான் வேலைக்கு போய்க் கொண்டிருந்தேன்.

4. நான் 2008 ஆம் ஆண்டு முதல் வேலை செய்து வருகிறேன். நான் வழக்கு தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களில் எஸ்.லதா என்று கையெழுத்து செய்திருப்பதாகவும் ஆனால் ஆவணம் பதிவு செய்த போது டி.லதா என்று நான் கையெழுத்து செய்திருப்பதாகவும் சொன்னால் சரிதான். 2008 இல் வேலைக்கு சேர்ந்த பின்பு என்னுடைய பத்தாவது மதிப்பெண் சான்றிதழில் இருப்பது போன்று தான் கையெழுத்து இருக்க வேண்டும் என்று எஸ்.லதா என்று கையெழுத்து செய்ய ஆரம்பித்தேன். நான் என் குடும்ப தேவைகளுக்காக பணம் கைமாற்றாக புரோநோட் எழுதிக் கொடுத்து வாங்கிவிட்டு தற்போது ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் வழக்கு ஆடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.